"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி
பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி"

மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்

தருமமே சேயம் சத்தியமே நித்தியம்

மலர் 38 | யாழ்ப்பாணம், வயாவிளான் பிரமாதி ௵ கார்த்திகை ௴ ௧௫-ந் ௳ (30-11-39) வியாழக்கிழமை | இதழ் 4

### தோத்திரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியே னதிகைக்கெடில வீரட்டா னத்துறை யம்மானே.

திருநாவுக்கரசுநாயனார்

# யுத்த சமாச்சார வியாக்கியானம்

## 10-வது பிரசங்கம்

14-11-39 தொடக்கம் 22-11-39 வரை நடந்த நிகழ்ச்சிகள்.


23-11-39 மாலை 6½ மணியளவிலே திரு. K. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பேசியது

இப்போ பேசப்போவது இம் மாசம் 14-ந் திகதி தொடக்கம் நேற்றுவரை நடைபெற்ற யுத்தச் செய்திகளைப்பற்றி. இவ்வாரமும் மேற்குப் போர்முனையில் ஒரு விசேஷ நடபடிக்கைகளும் யாதாமொரு பக்கமும் எடுத்துக்கொள்ளாதது இவ் யுத்தத்தின் போக்கைக் கவனித்து வருபவர்களுக்குச் சற்று ஏமாற்றத்துக்கு இடமாகும். மின்னல் முழக்கம்போலக் குண்டுமாரி பொழிந்து போலாந்தை ஒரு மாசத்தில் ஜேர்மனியர் தோற்கடித்ததை நாமறிவோம். போலாந்திற் கையாண்ட ராணுவமுறைகளை மேற்குப் போர்முனையிலும் ஹிற்லர் கையாளுவாரெனக் காத்திருந்த சிலருக்குச் சற்று ஏமாற்றந்தான். ஆனால் ஹிற்லர் அவ்வளவு புத்தியற்றவர் அல்ல. தனது மின்னல்முழக்க முறைகளை மேற்குப் போர்முனையிலே பிரயோகித்தால் அதற்குத் தகுந்த விடையளிக்கப் பிரெஞ்சுக்காரருடைய மஜிநோ அரணும் நேசதேசக் காலாட்படையும் விமானப்படையும் தயாராயிருக்கின்றன என்பதை ஹிற்லர் நன்கு உணர்வர். ஆகவே அவர் தனது வாக்குக்கு மாறாக ஒல்லாந்து பெல்சிய நாடுகளுக்கூடாகச் சென்று நேசதேசப்படைகளைத் தாக்கினாலன்றி இப்போர்முனையில் அதிசீக்கிரம் விசேஷநிகழ்ச்சிகள் ஒன்றும் நடக்கும்போலத் தோன்றவில்லை. அதிக மழை பெய்வதனால் றைன்நதி மீண்டும் பெருகத்தொடங்கியிருக்கிறது. ஆனால் இருதிறத்தாரும் விமானமூலமாய் வேவு பார்த்துக்கொள்ளுகிறார்கள். பகைவருடைய விமானங்களுட் சில வடபிரான்சுக்கு மேலாகப்பறந்து நேசதேசத் துருப்புகளின் நிலைகளை வேவுபார்த்துக்கொண்டு சென்றனவாம். இவைகளுட் சில நடுநிலைமையைமீறி பெல்சியம ஒல்லாந்து என்னும் தேசங்களுக்கு மேலாகப் பறந்திருக்கின்றன. அவ்வாறு பறந்த ஜேர்மனிய விமானமொன்றை டச்சுப் பீரங்கிகள் சுட்டுவீழ்த்தியதாக அறிகிறோம். சுவிட்சர்லாந்துக்குள்ளாலும் சில ஜேர்மனிய விமானங்கள் பறக்க முயன்றனவாம், பிரித்தானிய விமானங்கள் எதிரியினுடைய பீரங்கி வெடிகளைப் பொருட்படுத்தாமல் ஜேர்மனியிலே பல பிரதேசங்கள் மேலாகப் பறந்து சில பட்டணங்களின் பாதுகாப்பு முறைகளையும் விமானநிலையங்களையும் ஆராய்ந்து படம்பிடித்து ஒரு சேதமுமின்றித் திரும்பியிருக்கின்றன. மேற்குப் போர்முனையில் எதும் படாடோபமாய்ச் செய்ய முடியாதபடியால் ஹிற்லர் கடல்யுத்தத்தில் மிகப் பயங்கரமாகவும் பலமாகவும் வர்த்தகக் கப்பல்களைத் தாக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்போலிருக்கிறது. சர்வாதிகாரியான ஹிற்லர் தன்பொறுப்பாகவே யுத்தத்தை ஆரம்பித்துவிட்டு வாழாவிருந்தாரென்றால் அவரது நாசிக்கட்சியினரே அவரை ஒதுக்கிவிடுவார்களல்லவா? ஆகவே ஒருதுறையில் ஜயம் கிடைக்காவிட்டாலும் இன்னொருதுறையிலாவது ஜயங்காட்ட வேண்டுமல்லவா? இது தனிநாயக அரசுகள் நிலைபெற்றிருப்பதற்கு இன்றியமையாதது. சென்றவாரம் ஹிற்லருடைய நீர்மூழ்கிக்கப்பல்களுக்கும் கடற்சுரங்கங்களுக்கும் பத்துக்குமேற்பட்ட கப்பல்கள் இரையாகின. மூன்றுநாட்களில் மாத்திரம் நடுநிலைவகிக்கும் தேசங்களின் கப்பல்கள் ஆறு ஆழ்த்தப்பட்டன. இவற்றுள் "சைமன்பொலிவார்" என்னும் டச்சுக் கப்பல் ஓர் கடற்சுரங்கத்தில்மோதி உடைந்தாழ்ந்ததும் எத்தனையோ உயிர்கள் சேதப்பட்டதும் மிகப் பரிதாபத்துக்கு இடமானவை. பிரித்தானிய கடற்படைகள் சும்மா இருக்கவில்லை. ருஷியக் கொடியை உயர்த்தி ருஷியக் கப்பல்போல வேடம்புனைந்து சென்ற ஜேர்மானிய கப்பலொன்று கைப்பற்றப்பட்டது ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலுமொன்று அழிக்கப்பட்டது. எதிரியின் நீர்மூழ்கிகள் நடுநிலைநாட்டு வர்த்தகக்கப்பல்களைத் தாக்குவது அதிகரித்து வருகின்றது. நாற்பதுக்கு மேற்பட்ட நடுநிலைநாட்டுக் கப்பல்கள் யுத்தந்தொடங்கியநாள்தொட்டு இதுவரை ஆழ்த்தப்பட்டன. சாதாரண வேளையிலேயே தமது இராச்சிய பரிபாலனத்திலேயே தருமநெறிகளைக்கைவிட்டு அக்கிரமங்களையே செய்யும் ஹிற்லர் உதவுவார் ஒருவருமில்லாதவராய் முழுஉலகத்தினாலும் வெறுக்கப்பட்டவராய் எல்லோருடைய பகையையும் தேடிக்கொண்டிருக்கும் ஆற்றாத இந்த வேளையிலே யுத்ததருமத்தைக் கடைப்பிடிப்பாரென்றெண்ண எள்ளளவும் இடமில்லை. உடன்படிக்கைகளையும் சர்வதேச சட்டங்களையும் பொருட்படுத்தாத ஹிற்லருக்கு இனிமேல் மீறுவதற்கு ஒரு பிரமாணமும் மிச்சமில்லை. ஆகையினாலே பகைநாடு பொதுநாடு என்ற விதமான பாகுபாடு ஒன்றும் பாராமல் எதிர்ப்பட்ட கப்பல்களையெல்லாம் போர்முறைகடந்து ஆழ்த்தி வருகின்றார். ஆழ்த்தமுன்பு முன்னெச்சரிக்கை செய்வதுமில்லை. ஜேர்மனி பலதேசங்களின் கப்பல்களும் அதிகமாகப் போக்குவரவுசெய்யும் மார்க்கங்களிலே "ஹேக்" ஒப்பந்தத்துக்கு மாறாகக் கடற்சுரங்கங்களை எச்சரிக்கையின்றி அமைத்துவைத்து நட்டம்விளைக்கத் தொடங்கியிருக்கின்றது. இம்முறையினால் நேசதேசங்களின் வியாபாரத்துக்கு இடையூறு விளைக்கலாமென்றும், பிரித்தானியாவுக்கு உணவுப்பொருள்கள் சேருவதைத் தடைபண்ணலாமென்றும் ஹிற்லர் கருதுகிறார்போலும். ஆனால், பிரித்தானிய கடற்படையின் வல்லமையையறிந்த எவருக்கும் இது இலகுவான காரியமல்லவென்பது தெற்றென விளங்கும். சென்றவாரம் ஜேர்மனிய கடற்சுரங்கங்கள் அதிக நட்டத்தை விளைத்தது கவலைக்கிடமான காரியம். ஆனால் இவ்வக்கிரமச் செயல் ஹிற்லரையே மீண்டும் சூழ்ந்து பாதிக்குமென்பதற்குத் தடையில்லை. ஏனெனில், பிரித்தானிய சர்க்கார் இச் சட்டமறுப்புச் செயல்களைப் பழிவாங்குவதற்காக ஜேர்மனியிற் செய்யப்பட்டு ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்கள் யாவற்றையும் எக்கப்பல்களிற் கொண்டுபோனாலும் பறிமுதல்செய்வதாகத் தீர்மானஞ்செய்திருக்கிறார்கள். இத்தீர்மானம் ஜேர்மனியிலே சீக்கிரம் பொருளாதார நெருக்கடியைக் கொண்டுவருமென்பதற்கு ஐயமில்லை.

இப்பொழுது ஜேர்மனிக்கும் நடுநிலைமைவகிக்கும் நாடுகளுக்குமுள்ள தொடர்பு எவ்விதமாகி வருகிறதென்பதைச் சற்றுக் கவனிப்போம். ஜேர்மனியின் அயலிலுள்ள தேசங்கள் தங்கள் நடுவுநிலைமைக்குப் பங்கம்வாராதபடி மிகவும் சாவதானமாகவே தங்கள் காரியங்களை நடத்திவந்திருக்கின்றன. ஆனால், தங்கள் கப்பல்களை எவ்வித இரக்கமின்றி ஜேர்மனியர் தங்கள் கடற்சுரங்

(தொடர்ச்சி 4-ம்பக்கம் பார்க்க)

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்.



துதிவெண்பா

*ஞானஞ் சுகநிதியம் நல்லாயுள் தாவயவை*
*ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்*
*பேர்க்குமர னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற்*
*சீர்த்தியுடன்வந்து செகம்.* [கவெற்குச்


## சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

பிரமாதிஞு கார்த்திகைமீ கரு-ங்வ


## அரசினர் தயவும் அழிவுநிவிர்த்தியும்

சென்ற 15-ந் திகதி பெய்த பெருமழைகாரணமாக யாழ்ப்பாணம் இலங்கை இந்தியா முதலிய பலவிடங்களிலும் வெள்ளத்தினல் அதிகம் நட்டங்கள் நேர்ந்திருந்தமையைக்குறித்து யாவருமறிவர். யாழ்ப்பாணத்திற் பலவிடங்களிலே வெள்ளப்பிரவாகம் மிஞ்சியதனல் தம் வீடுகளையிழந்து அயற்குறிச்சிகளிற் சென்று சீவிப்போர் பெரும்பாலாராவர் வெள்ளம்வற்றவும், குடியெழும்பினேர் தங்கள் வீடுகளில் வந்து குடியிருக்கவும் அனேகநாட்கள் செல்லும்போலிருக்கிறது. தங்கள் வீடுகளையிழந்து, பொருள்களையிழந்து தவிப்போர்க்கு உதவிசெய்யும்பொருட்டு தலைமைக்காரரின் அறிவிப்பின்படி சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள் தேசாதிபதிக்கு அறிக்கையிட்டதன்பேரில் பசிபட்டினிகிடந்தோருக்கு அரிசிகொடுத்துதவியும், வீடுகள் விழுந்து இருக்க வசதியற்றிருந்தோர்க்கு அவ்வீடுகளைக் கட்டிக்கொள்ளப் பணவுதவிசெய்தும் வருகின்றனர்.

"தன்னுயிர்போல மன்னுயிரோம்பும் நமது சீவகாருண்ணியம் தங்கிய ஆங்கிலேய வரசினர் தமது பிரஜைகளைக் காக்கும் முறையில் எல்லாவகையிலும் அனுதாபங்காட்டி ஆதரவுசெய்து வருவதை எந்தக் கன்னெஞ்சரும் மறக்கவும், மறுக்கவும் மாட்டாரென நினைக்கின்றேம். நன்றிமறந்து ஆணவ மிகுதியினல் வெறிபிடித்துத் திரியும் சிலர் அரசினர் என்னசெய்தாரெனச் சொல்லவுங்கூடும்.

ஒருதேசத்திலே, ஒருநாட்டிலே தமது பிரஜைகளுக்குள் எவ்வித இடையூறுகள் ஏற்பட்ட காலத்தும் அச்செய்தியையறிந்தவுடன் அந்தவிடத்துக்குச்சென்று அப்பிரஜைகளுக்கு ஆறுதலளித்து அவர்களுக்குற்ற இடரைத்தவிர்த்து வேண்டியவுதவிகள் செய்துவருவது நமது அரசினரின் இயற்கையான செயல்களாகும். முற்காலத்திருந்த ஒல்லாந்த-போர்த்துக்கேய வரசினர் இப்படித் தம் பிரஜைகளைக் காத்து, மேய்த்து வந்தாரோவென்பது ஐயத்திற்கிடமாகும். பிரஜைகளைச் சிலகாலங்களில் இடர்ப்படுத்துவது, அல்லது கவனியாமல் விடுவதுண்டேனின் அது அரசினரால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர்களின் குறையேயன்றி வேறொன்றுமல்ல.

*"அனையிலார்க்கனமாய், வாழ அகமிலார்க்ககமாய்; துன்ப*
*மனமுளார்க்குவப்பாய்; நோயின்*
*வருந்துவோர்க்கருமருந்தாய்;*
*தனமிலார்க்கரும்பொன்னாய்; நற்*
*றுய்தந்தையிலார்க்கன்றாய்;*
*இனமிலார்க்கினமாய்; யார்க்கும்*
*யாவுமாயிருத்தலன்பே."*

என்பதற்கிணங்க, எமது காருண்ணிய அரசினர் பிரஜைசளாகிய எம்மனோர்மாட்டு எவ்வளவு தயவும் இரக்கமும் அன்பும் காட்டிவருகிறாரென்பதை அவர் செய்கையிலிருந்து யாவருமறிந்துகொள்கிறேம்.

சிலகாலங்களில் ஊர்கடோறும் துட்டர்களால் உண்டாகும் நட்டங்களை நிவிர்த்திக்கும் பொருட்டுத் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ்செய்து வருவதை யெவர்தானறியாதிருக்கின்றார்.

*"அருந்திடக்கூழும்; பூண ஆடையும் வீடுமின்றி*
*வருந்துவோர் எண்ணிலார் நம்*
*மருங்குளாரெனவறிந்தும்*
*விருந்திடாய்; மணிமாடத்து மேவிநீ*
*யொருவன்வாழப்*
*பொருந்தினய்; மனமே! மக்கட்போ*
*லிநீவிலங்கானயே"*

என்பதற்கிணங்க நமது அரசினரிருக்கவில்லை, தங்களைப் பெற்றதாய் தந்தையரும் தங்களுடன் கூடிப்பிறந்த சகோதரரும் மற்றும் சுற்றத்தாரும் பசிபட்டினிகிடந்து வருத்தமடையவிட்டு அவர்களை யெட்டிக்கனிபோ லொதுக்கிவைத்து நடத்தும் எத்தனைமகான்கள் உலகத்திலிருக்கின்றார். தம் பந்துக்களுற்ற விடர்களைநீக்கச் சொந்தமானவர்களிருந்து மிரார்போற்காணப்பட, நமது அரசாட்சியார் தேடிச்சென்று அவர்கள் குறையைநீக்கி வருகிறரெனின் இதுபோலும் புண்ணியச்செயல் வேறென்ன. ஆதலால் நமது அரசினர் நீடூழி வாழ்கவென யாவரும் போற்றிக்கோள்வோமாக.

---

### "இலங்கையும் யுத்தமும்"

இம் முகநாமங்கொண்ட மாதாந்த வெளியீடு ஒன்று வரப்பெற்றோம். இலங்கை அரசாங்க சமாச்சாரப்பகுதியினால் தற்போது நடக்கும் மகாயுத்தத்தைப்பற்றிய வியாசங்கள் செய்திகள் முதலியன மிகவும் தெளிவாக, ஆங்கிலம், தமிழ், சிங்களம் என்னும் முப்பாஷைகளிலும் பிரசுரிக்கப்பட்டு வெளியாகியிருக்கிறது. வருடசந்தா ரூபா ஒன்று.

---

### விவாகம்

புன்னாலைக்கட்டுவன் வாசரும், பிறக்றும் கொத்தாரிசும், ஸ்ரீமான் நாகமுத்து அவர்களின் புத்திரருமாகிய திருவளர்செல்வன் தம்பையா அவர்களுக்கும், ஸ்ரீமான் துரையப்பா அவர்களின் புத்திரி திருவளர்செல்வி இராசம்மாவுக்கும் நிகழும் கார்த்திகைமீ 8-ந்திகதி நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே அனேக சுற்றமித்திரர் சமூகத்திலே திருமங்கிலியதாரணக் கொண்டாட்டம் சிறப்புற நடந்தேறிற்று. தம்பதிகள் சகலபாக்கியங்களும் பெற்று வாழப் பெருமான் அருள்புரிவாராக.

# யுத்த சமாச்சார வியாக்கியானம்

## 11-வது பிரசங்கம்

### 21-11-39 தொடக்கம் 30-11-39 வரை நடந்த நிகழ்ச்சிகள்

30 - 11 - 39 மாலை 6½ மணியளவிலே
பண்டிதர் ஸ்ரீமான் ந. சி. கந்தையா அவர்கள் பேசியது

யுத்தம் ஆரம்பித்த இரண்டாவது வாரம் கடற்படைத் தலைவர் றீடர் ஹேக் உடன்படிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார். ஹேக் உடன்படிக்கையில் ஜெர்மனி கைச்சாத்திட்டிருக்கின்றது. ஹேக் ஒப்பந்தத்தின்படி, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு தேசம் எதிரியின் தேசக் கரைகளிலோ துறைமுகங்களிலோ வியாபாரப் போக்குவரத்தைத் தடைசெய்யும் நோக்கமாகக் கடற்சுரங்கங்களை வைத்தல் கூடாது.

யுத்தம் ஆரம்பித்த 11-வது வாரம் ஜெர்மனி ஹேக் ஒப்பந்தத்தை மீறி வடகடலின் கப்பற்பாதைகளில் சுரங்கவெடிகளை விதைத்தது. இது ஹேடி உடன்படிக்கைக்கு மாத்திரமல்லாமல் சர்வதேச சட்டத்துக்கும் முரணனது. இதனல் நடுநிலைமை நாடுகளும் ஐக்கிய தேசங்களும் பல கப்பல்களை இழந்தன. சைமன் பொலிவார் என்னும் 8000 தொன் நிறையுள்ள டச்சுக்கப்பல் ஆழ்ந்தது. யப்பான் 12,000 தொன் நிறையுள்ள ஒரு கப்பலை இழந்தது. நோர்வே சுவிடின் தேசங்களின் சிறிய கப்பல்கள் கடலில் மூழ்கின. கிப்சி என்னும் நாசகாரிக்கப்பல் சுரங்க வெடியில் அகப்பட்டுக் கடல் ஆழத்திற் சென்றது. பெல்வாஸ்ட் என்னும் குறாயிஸர் கப்பல் சேதமடைந்தது. ஆனல் உயிர்ச்சேதமொன்றும் ஏற்படவில்லை. இவ்வகையான பயங்கரச் செயல்களுக்கேற்ற பதில் நடபடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. பிரித்தினின் கிழக்குக் கரைகளில் நூற்றுக்கணக்கான சுரங்கவெடிகள் திரைகளால் ஒதுக்கப்பட்டன இதனல் கடல் நிலைமை எவ்வளவு மோசமாகிவிட்டதெனை அறியலாம். இச்சுரங்க வெடிகளெல்லாம் ஜெர்மன் நீர்மூழ்கிகளாலும், கடல்விமானங்காளல் பரசூட்மூலமாகவும் விதைக்கப்பட்டவை. கடற்சுரங்கங்களை இன்னும் அதிகப்படுத்துவதே ஹிற்லரின் நோக்கமெனப் பிந்திய செய்திகளால் தெரியவருகின்றது.

திரு. சேம்பலீன் கொம்மன்ஸ் சபையிலே பேசினர். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:--"ஜெர்மனி இப்போ அடாத செயல்கள்புரிந்து வருகின்றது. இச்செயல்கள் ஜெர்மனி செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிச் செய்யப்படுவனவாகும். இது சம்பந்தமாக அதினியாக் கப்பல் ஆழ்த்தப்பட்டதையும் பிரிட்டிஷ், நேச நடுநிலைமை நாடுகளின் கப்பல்களைச் சுரங்கவெடிகள், ரோப்பிடோ பிரங்கிப் பிரயோகங்களால் ஆழ்த்தி வருவதையும் குறிப்பிடுகின்றேன். இச்செயல்கள் முன்னெச்சரிக்கையின்றியும், நீர்மூழ்கிக் கப்பற் சட்டங்களை மீறியும் நடந்திருக்கின்றன. ஜெர்மனி மிருகத்தனமாக நடந்து வருகின்றது. இவ்வகையான செயல்களுக்கு நாம் பழிக்குப்பழி வாங்காமல் இருக்கமுடியாது. சென்ற மகாயுத்தத்திலே நீர்மூழ்கிகள் வியாபாரக் கப்பல்களைத் தாக்கி நாசஞ்செய்தன. இதற்குப் பதில் நடபடிக்கையாக ஜேர்மன் ஏற்றுமதிச் சரக்குகள் நடுக்கடலில் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டன. இப்பொழுது ஜெர்மனி சர்வதேச சட்டங்களை மீறுவதும், அது காரணமாக, சென்ற யுத்த நடைபடியையே இப்பொழுதும் நாம் கையாளத் தீர்மானித்திருக்கிறேம்."

மார்கழி 4-ம் தேதிக்குப்பின் சத்துரு துறைமுகங்களிலிருந்து புறப்படும் கப்பல்களிலுள்ளனவும் இதரதேசத் துறைமுகங்களிலிருந்து மார்கழி 4-ம் தேதிக்குப்பின் ஏற்றுமதி செய்யப்படுவனவுமாகிய ஜேர்மன் சரக்குகள் தடைசெய்யப்பட்டிருப்பதாக நேசதேசங்கள் சட்டம் பிறப்பித்திருக்கின்றன.

செத்லாந்து, கிழக்குக்கரை, தேம்ஸ் நதியின் வடபுறம் ஆதிய இடங்களிலே ஜெர்மன் விமானங்கள் 23 முறை பறந்தும் குண்டுகளை வீசியும் இருக்கின்றன. பல விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்ற விமானங்கள் வெருட்டியடிக்கப்பட்டன. மேற்குப் போர்முனையில் அடிக்கடி ஆகாயப்போர் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றது. ஒருநாளில் மாத்திரம் 7 ஜேர்மன் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. இவ்வகையான யுத்தமேயன்றி நிலத்திலும் கடலிலும் வேறு யுத்தம் நடைபெறவில்லை. ஆனல் வியாபாரத் துறையிலே பெரிய யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது சாதிகளின்சீவ ஓட்டத்தைக் குறைக்கத் தக்கது.

1914-ம் வருடத்திலே பிரித்தினும் பிரான்சும் பெல்ஜியத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகச் ஜெர்மனிக்கு மாறாகப் போராடின. நாளடைவிலே காரியம்மிஞ்சி உலகம் முற்றும் யுத்தத்தில் இழுக்கப்பட்டது. அம்மகாயுத்தத்தில் பிரித்தினுக்கு, பிரான்ஸ் இத்தாலி ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகள் தோள் கொடுத்தன. ஒரு லட்சம் பிரிட்டிஷ் பிரஜைகள் உயிர்துறந்தனர். 1918லே ஜெர்மனி முறிய அடிக்கப்பட்டது. அதனல் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஜெர்மனிதனது இராணுவத்தைக் குறைக்கும்படியும் போலிஷ் போன்ற ஜெர்மனியரல்லாதாரின் பரிபாலனத்தை ஒழிக்கும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டது.

சென்ற மகாயுத்தம் "யுத்தங்களை ஒழிக்கும் யுத்தம் என்று கருதப்பட்டது. ஒரு தேசம் பலாத்காரத்தினல் இன்னெரு சாதியை இனி யொருபோதும் பணியவைக்காது என நாமெல்லோரும் நம்பி

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா, லொத்தாங் கொறுப்பது வேந்து.

னேம். 1918-ம் வருடத்தின்பின் சில வருடங்களாக நாம் எண்ணியதுபோல் நடக்கும்போலத் தோன்றிற்று. பிரான்சும் பிரித்தினும் தமது தரைப்படை கடற்படை ஆகாயப்படைகளை ஓரளவுக்குக் குறைத்தன அது மிகவும் ஆபத்தான செயலென்று இப்போ தெரிகின்றது. செக்கர், சிலோவேக்கியர், பொலிஷர் முதலியோர் பிறர் ஆளுகையினின்றும் விடுபட்டுத் தம் இஷ்டமான ஆளுகையை ஏற்படுத்திக்கொண்டு சமாதானமாக வாழலாம் என்றும் நம்பினர். இனிமேல், பலாத்காரத்துக்கு இடங்கொடுக்க மாட்டோம் என்று உலகிலுள்ள பெரிய சாதிகளெல்லாம் கையொப்பமிட்டன. சாதிகளுக்குள்ளே பிணக்கு ஏற்பட்டால் பேச்சுவார்த்தைகள் மூலம் சமரசப்பட்டு விடுவதாக அவர்கள் உறுதி கூறினர்.

தமது ஆட்சித் தலைவரால் தொடுக்கப்பட்ட யுத்தம் பிழையானதென்று ஜெர்மனியர் கருதினர். அப்போர் வறுமைக்கும் பசிபட்டினிக்கும் 2 லட்சம் ஜெர்மனியரின் மரணத்துக்கும் ஏதுவாயிருந்தது. கேய்சர் ஜெர்மனியைவிட்டுத் தப்பி ஓடினர். ஜெர்மனியில் முடியாட்சி போய்க் குடியாட்சி ஏற்பட்டது.

1933லே ஒரு மாற்றம் ஏற்பட்டது, 1931ல் எல்லாத் தேசங்களிலும் நிகழ்ந்ததுபோலவே ஜெர்மனியிலும் விலை வீழ்ந்தது. இதைத் தருணமாகக்கொண்டு ஹிட்லரும் சீடருமாகிய நாசிகள் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிச் செல்வாக்கடைந்தனர்.

ஹிட்லரின் சரித்திரத்தை எல்லோரும் அறிவர். அவர் வியன்னாவில் வீடுகளுக்கு வெள்ளையடிக்கும் தொழிலில் ஆரம்பித்தார். பின் யுத்தத்தில் ஒரு பட்டாளத்துக்குத் தலைவராயிருந்தார். பின் தனது நாசிக்கொள்கையைப் பரப்பினார். நாசிக்கொள்கை என்றால் என்ன என்பதை "எனது திணறுதல்" எனப் பொருள்படும் நூலிலே தெளிவாக விளக்கியிருக்கிறார்.

நாசிக்கொள்கையின்படி "நோடிக்ஸ்" என்னும் உயர்ந்த சாதி ஒன்று உண்டு. ஜெர்மனியர் தாமே உலகத்தில் உயர்ந்த நோடிக் சாதியார் எனக் கருதுகின்றனர். நோடியராகிய தமக்குத் தமது கொள்கைகளை உலகிலுள்ள எல்லோரிடமும் புகுத்த அதிகாரமுண்டு என அவர்கள் நினைக்கின்றனர். "நோடிக்ஸ்" அல்லாத மற்றச் சாதியாருக்கிடையில் தமது ஆதிக்கம் இருக்கவேண்டுமென்பது அவர்களது கொள்கை. அவர்களுக்குத் தேசமே எல்லாமாக இருக்கின்றது. தனி மனிதன் கவனிக்கப்படமாட்டான். தனி மனிதன் பேச்சுச்செய்கை அபிப்பிராயங்களுக்கு இடங்கிடையாது. தேசத்தின் அதிகாரம் முழுவதும் ஒரு தலைவனிடத்தில் இருக்கிறது. அவன் சொல்வதே சட்டம். மற்றவர்கள் ஏன் என்ற கேள்வி இல்லாமல் அவன் சொல்வதற்குக் கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும்.

இக்கொள்கையை அனேகர் விரும்புகின்றனர். ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்துக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும். நாசிக்கொள்கையின்படி ஒரு வாக்குறுதி ஒருவருக்கு எவ்வளவு காலத்துக்குச் சாதகமாக இருக்கின்றதோ அவ்வளவு காலத்துக்கே அவர் அதைக் காப்பாற்றவேண்டும் இவ்வகையான மிலேச்சகொள்கை உலகசரித்திரத்தில் எப்போதாவது எவராலாவது கைக்கொள்ளப்படவில்லை ஹிற்லர் இவ்வாறு எப்போதாவது நடந்துகொள்வாரென்று ஒருவரும் நம்பவில்லை. ஆனால் அவர் அப்படியே வாக்குறுதிகளை மீறலானார்.

சிறிது சிறிதாக நாசிக்கொள்கைகள் பலவந்தமாகச் சனங்களிடையே புகுத்தப்பட்டன. நாசிக்கொள்கைகளை எதிர்த்த ஆயிரக்கணக்கானோர் கொலைசெய்யப்பட்டனர். பதினாயிரக் கணக்கானோர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டனர். சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அரசாங்கம் கேட்டுக்கொள்ளும் வகையில் எல்லாம் வேலைசெய்யும் சனங்கள் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். யூதர் கொடுமையாக நடத்தப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் அடித்துக் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சொத்துக்கள் அபகரிக்கப்பட்டுப் பசிபட்டினியால் வருந்தும்படி விடப்பட்டனர். இரகசியப் பொலீசாரால் கைதுசெய்யப்பட்ட சனங்கள் விசாரணையின்றித் தண்டனை அனுபவித்தனர் அல்லது தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர். மனித சுதந்தரங்கள் நசுக்கப்படன. மற்றத் தேசத்தவர்களின் றேடியோச் செய்திகளைக் கேட்பவருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டம் ஜெர்மனியில் இருக்கின்றது. "கொடுங்கோல் அரசன் ஆளும் நாட்டில் கடும்புலிவாழும் காடு நன்று."

ஜெர்மனியோடு சம்பந்தப்பட்ட இவையெல்லாம் நம்மைப் பாதிப்பனவல்ல. ஆங்கிலர் ஆட்சியின்கீழ் இவ்வகையான சம்பவங்கள் ஒருபோதும் நடக்கமாட்டா. பிரிட்டிஷாரின் ஆட்சியின்கீழ் ஒவ்வொரு தனி மனிதனும் சுதந்தரம் அனுபவிக்கின்றான். அவனுக்குப் பேச்சுச்சுதந்திரமும் எண்ணங்களை வெளியிடும் சுதந்திரமும் உண்டு.

ஹிட்லர் தனது வாக்குறுதியை மீறி நைன்லந்து அவுஸ்திரியா செக்கோசிலேவேக்கியா ஒன்றின்பின் ஒன்றாக ஆக்கிரமித்தார். இச்செய்கைகளால் ஹிட்லரின் வாக்குறுதிகளில் நம்பிக்கை இல்லையெனத் தெரிந்துவிட்டது. தேசங்களைப் பிடிப்பதில் ஹிட்லருக்குள்ள மட்டில்லாத பேராசையும் அறியப்பட்டது.

இக்காரணத்தால் போலந்து ரூமேனியா கிரீஸ் முதலிய நாடுகளின் சமாதானத்துக்குப் பங்கம் நேருவதாயிருந்தால் பிரித்தின் உதவி புரிவதாக உறுதி கூறிற்று.

1939-ம் வருடக் கோடைகாலத்திலே போலந்து ஜேர்மனிக்குப் பலியாகும்போலத் தெரிந்தது. ஜேர்மனி 1934ஆம் போலந்தோடு அனாக்கிரமிப்பு ஒப்பந்தஞ் செய்தது. அப்படியிருந்தும் அது போலந்துக்கு மாறாகச் சில பொய்க் குற்றச் சாட்டுகளைப் பிறப்பித்தது. அமெரிக்க குடியரசுத்தலைவர் ரூஸ்வேல்ட், பரிசுத்த பாப்பாண்டவர், முசோலினி முதலியோரும் பிரித்தினும் இருநாடுகளுக்குமிடையிலுள்ள பிணக்கைத் தீர்த்துவைக்க ஆனமட்டும் முயன்றனர் முடியவில்லை.

முன்னெச்சரிக்கையில்லாமலே ஜேர்மனி போலந்துமீது படை எடுத்தது. போலிஷ் நகரங்கள்மீது ஆகாயத்திலிருந்து குண்டுகள் வீசப்பட்டன. பிரித்தினும் பிரான்சும் தாம் செய்துகொண்ட வாக்குப் பிரகாரம் ஜேர்மனிமீது போர் ஆரம்பித்தன.

எதற்காக இந்த யுத்தம் நடக்கிறது? பிரித்தானிய ஆட்சியிலும் உலகத்திலும் நாசிக்கொள்கைகள் பரவாமல் இருப்பதற்கே. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் மதத்திலும் நிறத்திலும் மாறுபட்ட பல சாதியினர் வாழ்ந்தாலும் எல்லோருக்கும் பொதுவான சில கொள்கைகள் உண்டு. அவை அபிப்பிராய, பேச்சு, நியாய சுதந்தரங்களாகும்.

ஜேர்மனி வெற்றியடைந்து நாசிக் கொள்கைகள் பரம்புமானால் எங்கள் எல்லோருடைய சுதந்தரமும் நசுக்கப்படும். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் பாழாகிவிடும். ஜேர்மன் சனங்களோடு இப்போ யுத்தம் நடக்கவில்லை. ஹிட்லரைத் தலைவராகக்கொண்ட நாசி அரசாங்கத்தாரோடே போர் நடத்தப்படுகின்றது. இந்த யுத்தம் ஐரோப்பாவை மாத்திரம் பொறுத்ததல்ல ஒவ்வொரு ஆண் பெண் குழந்தையையும் பொறுத்ததாகும். நாங்கள் நியாயத்தின் பொருட்டுப் போராடுகின்றோம். இறுதியில் நியாயமே அநியாயத்தை வென்று புகழீட்டுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## மகா யுத்தநிகழ்ச்சிக் குறிப்புகள்.

**1939-ம்ஆண்டு செப்டெம்பர்மீ**

1உ ஜெர்மனி போலந்தின்மீது படையெடுத்தல்.

பிரித்தானியாவும் பிரான்சும் சேனை திரட்டல்.

இலங்கையிலே புதினத்தணிக்கை தொடங்கல்.

2உ ராணுவசேவைக்குக் கட்டாயப் பதிவுசெய்யும்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றல்.

3உ பிரித்தானியாவும் பிரான்சும்ஜெர்மனிக்கெதிராக யுத்தநிலை கொள்ளல்.

அரசர்பிரான் தமது சக்கராதிபத்தியத்திற்குச்செய்திவிடுத்தல்,

4உ வைக்கவுண்ற் கோர்ட் பிரிட்டிஷ் தரைப்படைகளின் தளகர்த்தராக நியமனம்பெறுதல்.

"அதினியா" கப்பல் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலால் ஆழ்த்தப்படுதல்.

5உ பிரித்தானிய ஆகாய யுத்தப்படை "கீல்" கால்வாயில் ஜெர்மன் போர்க் கப்பல்கள்மீது குண்டு போழிதல்.

12உ நேசதேச யுத்த தலைச்சபை பிரான்சிற் கூடுதல்.

13உ கப்பல்களுக்குத் துணைக் காவல்முறை (Convoy System) ஆரம்பித்தல்.

14உ எதிரிகள் விஸ்றியூலா நதியைக் கடத்தல்.

16உ மஞ்சூக்கோவில் ஜப்பானும் சோவியற்றும் சண்டையை நிறுத்தல்.

17உ போலந்திற்குள்ளே சோவியற் படை புகுதல்.

18உ எதிரிகள் "யூ" நீர்மூழ்கிகள் விமானப்படையைத் தாக்கிச் செல்லும் "கறேஸ்" என்னும் பிரிட்டிஷ் கப்பலைத் தாழ்த்தல்.

20உ ஹிற்லருக்குப் பிரிட்டிஷ் பிரதமமந்திரி பதிலளித்தல்.

பிரான்சிய மந்திரசபை தீர்ப்பான வெற்றிபெறும்வரை யுத்தம்செய்யத் தீர்மானித்தல்

22உ வெளிநாட்டு ராஜதந்திரிகள் வார்சோவை விட்டகலுதல்.

ரூமேனிய பிரதம மந்திரியை நாசிகள் சதிக்கொலைசெய்தல்.

24உ லேடி கோல்டிக்கட் அவர்களும் திரு. எம். எம். வெடபோண் அவர்களும் செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் பணஉதவி செய்யுமாறு விண்ணப்பித்தல்.

26உ பிரான்சிலுள்ள சமதர்மக்கட்சி குலைக்கப்படுதல்.

27உ வார்சோ சரணடைதல்.

29உ முடிவாகப் போலந்தைப் பங்குபண்ணல்.

எஸ்தோனிய—ரூஷிய அன்னியோன்னிய உதவியொப்பந்தம நிறைவேற்றல்.

30உ பிரான்சிலே புதிய போலிஷ் மந்திரசபையும் அதன் தலைமைக்காரியாலயமும் அமைபடல்.

**ஒக்டோபர்மீ**

3உ ரூஷிய - ஜெர்மனிய ஒப்பந்தத்தைப்பற்றிப் பிரதம மந்திரி பேசல்.

6உ ஜெர்மன்பாராளுமன்றத்தில் ஹிற்லருடைய சமாதானப் பேச்சு.

10உ இந்தியாவின் எதிர்காலத்திட்டங்களைக் கூறும்படி இந்திய தேசிய காங்கிரஸ் பிரித்தானியாவைக் கேட்டல்.

11உ ரூஷிய லிதுவேனிய ஒப்பந்தம் நிறைவேறல்.

158,000 பிரிட்டிஷ் துருப்புக்கள் பிரான்சில்இறங்கியதைத் திரு. ஹோர் பெலிஷா தெரிவித்தல்.

12உ ஹிற்லருடைய சமாதானத்திட்டங்களுக்கு பிரிட்டிஷ் பிரதமமந்திரி விடையளித்தல்.

13உ சென்ற். டன்ஸ்றனுக்குக் கொடுக்கத் தேசாதிபதி இலங்கையில் ஒரு நிதி தொடங்கல்.

14உ H. M. S. 'றேயல்ஓக்' என்னும் பிரிட்டிஷ் கல்பலை எதிரிகளின் நீர்மூழ்கி தாழ்த்தல்.

16உ ஜெர்மனி தனது சாதியினரை போல்ற்றிக் நாடுகளிலிருந்து வெளியேற்றத் தொடங்கல்.

ஸ்கொத்லாந்துக் கரையையும் அநேக ஆங்கிலப்பட்டணங்களையும் ஜேர்மன் ஆகாயப்படை தாக்குதல்.

17உ ஸ்காப்பா புளோவை ஜெர்மன் ஆகாயப்படை தாக்குதல்.

18உ இந்தியகொள்கை விஷயமாக வைஸ்ராயின் பேச்சு.

"யோர்க் ஷையர் என்னும் பிரயாணிக் கப்பல் பகைவரால் முன்னெச்சரிக்கையின்றி ஆழ்த்தப்படல்

19உ ஒருவரையொருவர் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆங்கிலோ-பிரான்சிய-துருக்கி ஒப்பந்தம் நிறைவேறல்.

20உ இலங்கை யுத்தப் பாதுகாப்புச் சட்டங்கள் "கெசெற்றில்" வெளியாதல்.

23உ இந்திய காங்கிரஸ் மந்திரிகள் பதவிகளிலிருந்து நீங்கத் தீர்மானித்தல்.

24உ ஹிற்லர் றோமன்கத்தோலிக்கதிருச்சபையைக்குலைக்கும்படி கட்டளையிடல்.

26உ யுத்தகாலத்திலே தவிர்க்கற்குரிய வியாபாரப் பொருட்களின் சட்டவிஷயமாகச் சோவியற் பிரித்தானியாவுக்கு எதிர்ப்புக்கூறல்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நடுநிலைமைச்சட்டம் நிறைவேறல்.

28உ லிதுவேனிய படை வில்னாவைக் கைப்பற்றல்.

31உ ரூஷிய பிரதம மந்திரி திரு. மொலற்றேவ் சோவியற் பாராளுமன்றத்திலே ரூஷியாவின் நடுநிலைமையை மீளவும் உறுதிப்படுத்தல்.

## யுத்த சமாச்சார வியாக்கியானம்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கங்களுக்கு இடையாக்குவதனால் அவர்மாட்டு நடுநிலைத்தேசங்களுக்கு அனுதாபங் குறைந்துவருகிறது. ஸ்காந்திநேவிய தேசங்கள் ஜெர்மனியோடு சிநேகபான்மையுடன் நடப்பது கஷ்டமாகி வருகிறது. சுவீடன் தேசம் தனது வர்த்தக சம்பந்தத்தைப் பலப்படுத்துவதற்காக பர்லினுக்குச் சிலபிரதிநிதிகளை அனுப்பியது. ஆனால் நேசதேசங்களுக்கு நட்டம்வரக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட அவர்கள் விரும்பாமையினாலே சில பிணக்குகள் உண்டாயின. அதனாலே அவ்வியாபாரப் பேச்சுக்கள் முறியுந்தறுவாயி லிருக்கின்றன. ஜெர்மனிக்கு அவசியம் வேண்டிய இரும்பை சுவீடன் கொடுத்துவந்தது. அதனை இனிமேல் ஒருவேளை கொடுக்காமலும் விடக்கூடும். அப்படி நேருமானால் ஜெர்மனிக்கு அதிக நட்டம் விளையும்.

ருமேனியாவோடும் இவ்விதமான தொந்தரவு தொடங்குகிறது போலத் தோற்றுகிறது. ருமேனியா ஜெர்மனிக்குக் கொடுக்க உடன்பட்ட எண்ணெய் முதலிய பொருட்கள் தாமதப்படுவது ஒருகாரணமாம். இதையொரு சாட்டாக வைத்துக்கொண்டு ருமேனியாமீது ஜெர்மனி பாய்ந்தால் அது ஜெர்மனிக்குத்தான் சொல்லமுடியாத பெரும் நட்டமாகும். ருமேனியாவுக்கு ஆபத்து ஏற்பட்டால் இங்கிலாந்தும் பிரான்சும் உதவிசெய்ய வாக்களித்திருக்கின்றன. அன்றியும் துருக்கியும் அதனுடன் சிநேகம்பாராட்டி வருகிறது. ஹங்கேரியும் ஜெர்மனிக்கு இடங்கொடுக்க மாட்டாது. எனவே "போல்க்கன்" நாடுகள்மீது ஜெர்மனி சீறியெழுந்தால் ஹிற்லருடைய அரசாட்சி விரைவிலழிந்துவிடும்.

ஸ்காந்திநேவிய தேசங்களோடும் போல்க்கன் நாடுகளோடும் உள்ள தொடர்பு மாத்திரமே இவ்விதம் பாதகமாகின்றதோவென்றால் அருகிலுள்ள பெல்ஜியம் ஒல்லாந்து முதலிய நாடுகளின் தொடர்பும் சந்தோஷமானதாய்க் காணவில்லை. இந்நாடுகளின் எல்லைப்புறங்களில் ஜெர்மன்சேனைகள் திரண்டிருக்கின்றன. இந்த நாடுகள்செய்த சமாதான முயற்சிகளை ஹிற்லர் மிகவும் அகந்தையுடன் அசட்டைசெய்து ஒதுக்கிவிட்டார். நேசதேசங்களோ மிகவும் மரியாதையாக விடையளித்தன. ஆனால், குற்றமுள்ள மனத்தையுடைய ஜெர்மன் வெளிநாட்டு மந்திரி திரு ரிப்பன்திரொப் அவர்களுக்கு அது "மொட்டை" மறுமொழியாகத் தோன்றிவிட்டது. அதனாலே அவர் மரியாதையான பதில் அளிக்காமல் மௌனஞ்சாதிக்கவும் நேரிடலாயிற்று.

இப்பொழுது பெல்ஜியம் ஒல்லாந்து என்னும் இருதேசங்களின் நடுநிலைமையை மீறமலிருப்பது அவர் உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டன்று; அவருடைய சேனாபதிகள் மீறுதல் தவறாகுமெனப் புத்திமதி சொல்லுவதனாலாகும். மீறினால் இப்பொழுது பேச்சளவிலே நிற்கும் அநேக பொதுநாடுகள் ஜெர்மனியை எதிர்க்க நேரிடுமென்பதை நாசித்தலைவர்கள் உணருகிறார்கள்போலும். இது ஒருபுறமிருக்க, சென்ற வெள்ளிக்கிழமை லண்டனிலே நேசதேசங்களின் பரமயுத்தசபை கூடியது ஒரு விசேஷ சம்பவமாகும். பிரெஞ்சு பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளும் தரை கடல் விமானப்படைகளின் தளபதிகளும் சமுகமளித்தனர். ராணுவ முயற்சிகளையும் பொருளாதார முயற்சிகளையும் ஒன்றுபடுத்தத் தீர்மானித்து விட்டார்கள். இதனாலே போர் விரைவிலே முடியக்கூடும். பல வருஷங்களுக்குத் தொடர்ந்து போர்புரியத் திட்டம் வகுத்திருந்தாலும் பொருளாதார விஷயத்திலே ஜெர்மனியைத் திக்குமுக்காடச் செய்வதனாலே சிலமாதங்களிலேயே போரை முடிக்கவுங்கூடும்.

இனி எதிரி விமானச்சண்டையிலாவது சற்றும் தமக்குப் பயன்தரக்கூடிய கிருத்தியங்கள் ஆற்றிக்கொள்ள ஏலாதது மிகவும் திருப்திகரமான காரியம். இவ் யுத்தம் தொடங்குமுன்னும் அதற்குப்பின்னும் தமது விமானப்படைக்கு நிகரானது வேறொன்றுமில்லை யென்றும், அவற்றின் வன்மையை வேண்டிய நேரத்திலே பிரித்தானியருக்கு அறிவுறுத்துவோமென்றும் ஹிற்லரும் கோறிங்கும் அடிக்கடி பிரசாரம் செய்தனர். பலரும் காத்திருந்தபடி எதிரி இன்னும் பலத்த விமானச்சண்டையைத் தொடங்காததற்குக் காரணம் என்னவென்றால் முதலாவதாக பாரிஸ் லண்டன்மீது அவர் பொழியும் ஒவ்வொரு குண்டுக்கும் பதிலுத்தரமாகத் தமது தலைநகரமாகிய பர்லினில் ஐந்து குண்டுகள் பொழியப்படுமென்பதை நன்குணர்வர். இரண்டாவதாக இதுவரையில் நடந்த விமானச்சண்டைகளில் எதிரிக்குக் கூடியநட்டம் ஏற்பட்டிருக்கிறது, பிரித்தானியாவிலுள்ள ராணுவ நிலையங்களைத் தாக்கப் பன்முறை எத்தனித்தும் பயன்படாதது நாமறிந்ததே. சென்றவாரம் எதிரியினுடைய விமானங்கள் வேவுபார்க்கும் நோக்கத்துடன் இங்கிலாந்தின் தென்கீழ்ப்பாகத்திலும் லண்டன் பகுதியிலும் பறந்தன. உடனே விமானஎதிர்ப்புப் பீரங்கிகளும் துரத்தி விமானங்களும் அவைகளைத் துரத்திவிட்டன. இவ்விதமே ஸ்கொத்லாந்தின் வடபாகத்திற் பறந்து திரிந்த ஜெர்மன் விமானங்களும் விரைவிலே துரத்தப்பட்டன. நேற்று மேற்குப் போர்முனையில் நேசதேச விமானங்களினாலே சுடப்பட்டுத் தீப்பற்றி இரண்டு ஜெர்மன் விமானங்கள் கீழேவிழுந்தனவாம் இன்னொன்று பிரான்சுக்குமேலாகப் பறக்கும்பொழுது கீழே வீழ்த்தப்பட்டது.

இவ் யுத்தம் சிலமாசங்களிலே முடியக்கூடும் என்று முன்பு சொன்னோம். அப்படி முடிவதற்கு முக்கிய காரணம் ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை. எப்போதானும் முடிந்தாலும் நேசதேசங்களே வெற்றியடையுமென்பதை ஜெர்மனியர் அறிவர். ஆனால் மனிதவர்க்கத்தின் வளர்ச்சியை விரும்புபவர் எவருக்கும் லக்ஷக்கணக்கான உயிர்ச்சேதத்தைத் தடுக்கவேண்டுமென்பது கோரிக்கை. அதற்கேற்ப ஜெர்மனிய மகாஜனங்களே இவ் யுத்தத்தைச் சீக்கிரத்திலே முடிவுக்குக் கொண்டுவருவார்கள்போல் ஜெர்மனியின் உள்நாட்டு நிலையிலிருந்து அறியக்கிடக்கின்றது. நாளுக்குநாள் இது மிகவும் மோசமாகிவருகிறது. ஜெர்மனியிலே ஹிற்லருக்கு மாறாகப் புரட்சியொன்று அதிவிரைவில் வருமெனவும் அதனால் உலகத்திற்கே நன்மை விளையுமெனவும் ஹேர் ஒற்றோ ஸ்ருஸர் கூறுகின்றார். ஹிற்லரைச் சார்ந்தவர்கள் யுத்தத்தின் கோரங்களை அனுபவிக்கவேண்டும்; ஜெர்மனிய ராணுவம் தோல்வியடையவேண்டும்; நாசியர் தாங்கமுடியாத் துன்பங்களையனுபவித்தல் வேண்டும். இவைகளோடு நாசியர் அழிவர் என்பது அவருடைய அபிப்பிராயம். ஹிற்லர் இன்னும் தாமதஞ்செய்யாமல் உடனே தாக்கத்தொடங்கினால் இவைகள் தாமாகவே நேரும்.

ஜெர்மனியிலே மீளவும் முடியாட்சியை ஸ்தாபிப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. விசேஷமாகப் பிரஷியாவிலும் பவேரியாவிலும் இதற்கேற்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. ருப்பிரேஷ்ட் இளவரசருக்கும் பழைய முடிக்குரிய இளவரசருக்கும் நாட்டிலே செல்வாக்கும் மதிப்பும் அதிகரித்து வருகின்றன. அவுஸ்திரியா செக்கோஸ்லோவக்கியா என்னுமிடங்களிலே சனங்கள் வெளிப்படையாகப் புரட்சிசெய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இப்புரட்சிகளில் ஈடுபட்டவர்களும் படாதவர்களுமான செக் சாதியாரைக் குரூரமாகக் கொலைசெய்தபோதிலும் அவர்கள் எப்பொழுதும் ஹிற்லரின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பரென்பதில் ஐயமில்லை. இனி ஹிற்லருக்குமாறாக ஜெர்மனியிலே சுதந்தரக்கட்சி பெலமடைந்துவருகிறது. விரைவிலே உள்நாட்டுக்குழப்பங்கள் அதிகரிப்பதற்கு அடையாளமாகவே மியூனிச் வெடிகுண்டு விபத்து நடைபெற்றதுபோலும். எல்லாம் நாசியாட்சிக்கு மாறாகவேயிருக்கின்றன.


### வல்லிபுர மான்மியம்

இப்பெயருடைய புத்தகம் எம்மிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை சதம் 10.

இதனை இயற்றிவர் துன்னாலை வடக்கு பிரமஸ்ரீ. ஆ. சபாரத்தினக்குருக்கள் அவர்களாவர்.

### தமிழ் ஆசௌசதீபிகை

இதனை இயற்றியவரும் மேற்படி குருக்கள் அவர்களாம். இதன் விலை சதம் 40.

### அட்டபந்தன மருந்து

சுத்தமாக எம்மாற் செய்யப்பட்ட மேற்படி மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன. தேவையானோர் எம்மிடத்தில் வந்தேனும் அல்லது தபால்மூலமாயேனும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்

கு. கா. மதுரேஸ்வரக் குருக்கள்

சிவலிங்கப்புளியடி

வண்ணார்பண்ணை


## சந்தா விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5

இலங்கை, இந்தியாவுக்கு ரூபா 2½

## விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼

கலம் ஒன்றுக்கு ரூபா 3


## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை 1. காணிப்பெயர், தெங்கங்கிணற்றடி. புதிய கல்வீடு கட்டப்பட்டிருக்கிறது. நிலப்பரப்பு 4½. பெறுமதி ரூபா 4000 ரோட்டுப் பக்கத்தில் இருக்கிறது. மார்க்கட்டில் இருந்து ¼ மைல் தூரம்.

2 மேற்படி புலோலி கிழக்கு, பருத்தித்துறை. காணிப் பெயர், தெங்கங்கிணற்றடி. பழய கல்வீடு இருக்கிறது. நிலப்பரப்பு 2. பெறுமதி ரூபா 2000. ரோட்டுப் பக்கத்தில் இருக்கிறது. மார்க்கட்டில் இருந்து ¼ மைல் தூரம்.

3. மேற்படி புலோலி கிழக்கு, பருத்தித்துறை. காணிப்பெயர் தெங்கங்கிணற்றடி. பழய கல்கட்டிடம் இருக்கிறது. நிலப்பரப்பு 1½. பெறுமதி ரூபா 2000. ரோட்டுப் பக்கத்தில் இருக்கிறது. மார்க்கட்டில் இருந்து ¼ மைல் தூரம்.

4. மேற்படி புலோலி கிழக்கு, பருத்தித்துறை. காணிப்பெயர் தெங்கங்கிணற்றடி. புகையிலைச் செய்கைக்குரிய தோட்டத்தரை 6½ பரப்பு பெறுமதி ரூபா 4500 ரோட்டுப் பக்கத்தில் இருக்கிறது. மார்க்கட்டில் இருந்து ¼ மைல் தூரம்.

5. சாவகச்சேரியைச் சேர்ந்த சரசாலை என்னும் இடத்தில் வயலின் பெயர் ஆவரந்துவாகை. பரப்பு 22. பெறுமதி ரூபா 3300. வாங்க விருப்பமுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்குக் கடித மூலமாகவோ அல்லது நேரில் பேசியோ விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

விலாசம்:—

சோ. பொன்னுத்துரைஐயர்

75-ம் நம்பர் மேட்டுத்தெரு

கொழும்பு.

Address.

S. PonnuduraiIyer

No-75. Hill Street

Colombo


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளை சீமா"விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1939-ம் வருஷம் கார்த்திகைமீ 30-ந் திகதி வியாழக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.